## பொள்ளாச்சி நகராட்சி

## 31.05.2018 அவசரக் கூட்ட தீர்மானம்

962) நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 21.05.2018ம் தேதிய ந.க.எண்.12503/2018/ஆர்1 எண் கடிதத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை அரசு ஆணை எண்.11 உள்ளாட்சி அமைப்புகளின் தொழில்வரி சட்டம் 1999 விதி 16ன்படி தொழில்வரியானது ஒவ்வொரு ஐந்தாண்டுக்கு ஒரு முறை பொது சீராய்வு செய்யப்பட வேண்டுமெனவும் குறைந்தபட்சம் 25 சதவிகிதம் முதல் அதிகபட்சம் 35 சதவிகிதம் வரை உயர்வு செய்யப்பட வேண்டும் என உத்திரவிடப்பட்டுள்ளதாகவும் 01.10.2018ம் இரண்டாம் அரையாண்டு முதல் தொழில்வரி திருத்தியமைக்கப்பட வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது வசூலிக்கப்பட்டு வரும் வரியில் குறைந்தபட்சம் 25 சதவிகிதமும் அதிபட்சம் 35 சதவிகிதமும் உயர்வு செய்ய தெரிவித்துள்ளபடி கீழ்க்கண்டவாறு தொகை கணக்கிடப்படுகிறது.

| வ.எண் | அரையாண்டு சராசரி வருமானம் | 01.10.2013 முதல் வசூல் செய்யப்படும் தொகை ரூ. | 01.10.2018 முதல் 25% உயர்வு தொகை ரூ. | 01.10.2018 முதல் 35% உயர்வு தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1. | ரூ.21,000 வரை | இல்லை | இல்லை | இல்லை |
| 2. | ரூ.21,001 முதல் ரூ.30,000 வரை | 123 | 153.75 | 166.00 |
| 3. | ரூ.30,001 முதல் ரூ.45,000 வரை | 305 | 381.25 | 412.00 |
| 4. | ரூ.45,001 முதல் ரூ.60,000 வரை | 610 | 762.50 | 824.00 |
| 5. | ரூ.60,001 முதல் ரூ.75,000 வரை | 914 | 1142.50 | 1234.00 |
| 6. | ரூ.75,001 க்கு மேல் | 1219 | 1523.75 | 1646.00 |

மேற்படி அரசாணையின் படியும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதன் படி ஆண்டுக்கேட்பு ரூ.2500/– ரூபாய்க்கு மிகாமல் தொழில்வரி நிர்ணயம் செய்திட தெரிவிக்கப்பட்டுள்ளதன் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–**

1. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையில் தெரிவிக்கபட்டதன் படி 01.10.2013 தொழில்வரி பொது சீராய்வில் நிர்ணயம் செய்யப்பட்ட தொகையில் இருந்து 01.10.2018 முதல் நகராட்சியின் நிதி நிலையை உயர்த்தும் பொருட்டு 35% தொழில்வரி உயர்வு செய்து நிர்ணயம் செய்யலாம்.
2. மேலும் ஆறுமாத வருமானம் ரூ.75000/–க்கு மேல் உள்ளவர்களுக்கு ஏற்கனவே உள்ள (01.01.2013ல் உள்ள) தொழில்வரி ரூ.1219/– க்கு 35% உயர்வு செய்யும் பொழுது ரூ.1646/– வருவதை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதத்தில் குறிப்பிட்டபடி ஆறுமாதத்திற்கு தொழில்வரி ரூ.1250/– என நிர்ணயம் செய்யலாம்

**ந.க.எண்: அ5 / 2714 /2018**